**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**
**O.S. No.97/2025**

2026 –ம் ஆண்டு ஜூன் மாதம் 03 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 03.06.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மகாலிங்கம் (PW– 1) | வயது | : | 75 /2026 |
| க/த பெயர் | : | திரு. ரெகுபதி | தொழில் | : | அரசு ஊழியர் (ஓய்வு) |
| முகவரி | | மூவாநல்லூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து என்னுடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் 1ம் பிரதிவாதி எனது அண்ணன், 2ம் பிரதிவாதி எனது அண்ணன் மகள், 3ம் பிரதிவாதி 3ம் தரப்பினர்.

2) 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஆகஸ்ட் 2022 இல் தெரியவந்தது. மேற்கண்ட விபரங்கள் எனக்கு முன்பே தெரிந்திருந்தும் வழக்கிற்காக ஆகஸ்ட் 2022 இல் தெரிவந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 முதல் 8 பிரதிவாதிகளான அரசு அலுவலர்கள் அவர்கள் கடமைப்படி செயல்பட்டதால் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 17:01:26 +0530

District Munsif
Mannargudi.